**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 524 of 2012**

**Deposition of Witness P. W.5**

| | |
|---|---|
| **Name : டாக்டர். முகைதீன் நௌசாத் கனி** | **Father/Husband's Name: சையது முகமது மசூது** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 11.06.2024**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அரசு மருத்துவமனை பழனியில் முதன்மை குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.04.2012 அன்று இரவு 11.30 மணியளவில் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது 28 வயது செல்வம் என்பவர் தன்னை தன்னுடைய வீட்டில் வைத்து சுமார் 50 தெரிந்த நபர்கள் இரவு 10.30 மணியளவில் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு வந்தார் அவரை பரிசோதனை செய்த போது அவரது நெற்றியில் 2x2 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் இருந்தது. 2. அவரது இடது முன்னங்கையில் வலி இருந்ததாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் என்று சான்றளித்தேன். **என்னிடம் காட்டப்படும் விபத்து உ/இ காயச்சான்று என்னால் வழங்கப்பட்டது தான். அது அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அன்றே 11.40 மணியளவில் அவரது சகோதரர் முத்துச்சாமி 32 வயது , அதே சம்பவத்தில் காயம் அடைந்ததாக கூறி சிகிச்சைக்கு வந்தார் அவரை பரிசோதித்த போது அவருக்கு தலையில் 1x4 செ.மீ அளவுள்ள சிதைந்த காயம் இருந்தது. 2. இடது முன்னங்கையில் 2x4 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் இருந்தது. 3. இடது தோள்பட்டையில் வலி இருந்தது. 4. இடது முழங்காலில் 2x3 செ.மீ அளவுள்ள சிதைந்த காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் என்று சான்றளித்தேன்.

**என்னிடம் காட்டப்படும் விபத்து உ/இ காயச்சான்று என்னால் வழங்கப்பட்டது தான். அது அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேற்கூறிய இருவரின் தந்தை வீரன் என்பவரும் அதே சம்பவத்தில் காயம் அடைந்ததாக கூறி சிகிச்சைக்கு வந்தார் அவருக்கு தலையில் 2x3 செ.மீ சிதைந்த காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயம் என்று சான்றளித்தேன். **என்னிடம் காட்டப்படும் விபத்து உ/இ காயச்சான்று என்னால் வழங்கப்பட்டது தான். அது அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

4. செல்வத்திற்கு ஏற்பட்ட காயத்தை பொருத்து கூர்மையான முனை பகுதிகள் உள்ள இடங்களான கதவு, ஜன்னல், சுவர் ஆகிய இடங்களில் மோதுவதால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். முத்துச்சாமி மற்றும் வீரன் ஆகியோருக்கு 50 –60 பேர் கொண்ட கூட்டத்தில் தானாக நிலை தடுமாறி கீழே விழுவதன் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்று சொன்னால் சரிதான். 3 நபர்களும் என்னிடம் சிகிச்சைக்கு வந்த போது தங்களை சுமார் 50 நபர்களுக்கு அதிகமான நபர்கள் தாக்கியதாக கூறினார்கள். குறிப்பாக யார் தாக்கினார்கள் என்று பெயர் விபரம் எதுவும் யாரும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.07.04 15:47:53 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**